குகள் நிலுவையிலே இருக்கின்றன. டெமாலிஷன் நோட்டீஸ் கொடுத்ததற்கு கார்ப்பரேஷனால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது. எத்தனை வழக்குகள்மீது நடவடிக்கை எடுக்கப்பெற்றது என்பது பற்றிய விவரத்தை கார்ப்பரேஷனிடமிருந்து பெற்று உறுப்பினருக்கு அனுப்புகிறேன்.

குடிசை மாற்று வாரிய வீடுகள்.

31—*(வினா எண். 12083) திரு. கு. ரமணி: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்டுள்ள வீடு கள் நீண்டகாலமாக பராமரிப்பின்றி ஏராளமான வீடுகள் பழுதடைந்துள்ளது அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவைகளை பழுது பார்க்க அவசரத் திட்டம் ஏதாவது போடப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதுபற்றிய விவரங்கள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலை வர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆம்.

(இ) அரசு அனுமதியுடன் அட்கோ கடனுதவியுடன் 121 திட்டப் பகுதிகளிலுள்ள குடியிருப்புகளை ஏறக்குறைய ரூ. 1 கோடியே 70 இலட்சம் செலவில் பழுதுபார்க்கக் கோரும் செயற்குறிப்பு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத் தால் பரிந்துரை செய்யப்பட்டு அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, கோவை மாநகரத் தில் இரண்டு மூன்று பகுதிகளில் உள்ள குடிசை மாற்று வாரி யத்தால் கட்டப்பட்ட வீடுகளிலே மேலே ஏறி போகக்கூடிய படிக்கட்டுகள் பூரா இடிந்து விழுந்து, மேலேயிருக்கிற சீலிங் எல்லாம் இடிந்து விழுந்து, சிலருக்குக் காயம் ஆகி, இப்படி இடிபாடுகள் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. ஜன்னல்கள் உடைந்து போகின்றன, மாற்றப்படுவதில்லை. மேலே இருக் கிற கழிவறை தண்ணீர் கீழேயிருக்கிற வீடுகளிலே வந்து விழு கிறது. இதை நான் நேரிலே மாவட்ட ஆட்சித் தலைவரை யும் மற்றவர்களையும் அழைத்துபோய்க் காட்டியிருக்கிறேன். ரிப்பேருக்குப் பணம் கொடுப்பதில்லையென்ற செய்தி வந்திருக் கிறது. அப்படிப்பட்ட இடங்களுக்கு உடனடியாக ரிப்பேருக் குப் பணத்திற்கு அனுமதி கொடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

1987 மார்ச் 31]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்றுப் பகுதியில் ஏறத்தாழ 40,000 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. மெயின் டெனன்சுக்கு ஒதுக்கப்படுகிற பணம் போதுமானதாக இல்லை என்கிற காரணத்தாலே அப்போதைக்கப்போது சீதோஷ்ண நிலைகளால், புயல், பெரு மழை இவற்றால் சேதாரம் ஏற்படு கிற சூழ்நிலைகளில் பழுதுபார்க்கிறபொழுது, அவற்றை முழு மையாகச் செய்ய முடியவில்லை. அதற்காகத்தான் இப் பொழுது சமீபத்திலே அரசு ஒரு திட்டத்தைப் போட்டு, ஏறக் குறைய எல்லா வீடுகளையும் பழுது பார்ப்பதற்காக, சுமார் ரூ. 1 கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டிலே, 22 வருஷம் கடன் உதவியோடு அதைச் செயல்படுத்த முன் வந்திருக்கிறது.

(முற்பகல் 10-40)

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, குடிசை மாற்று வாரியம் ஏற்படுத்தப்பட்டு குடிசைகளை அப்புறப்படுத்தி வீடுகள் கட்டி சுகாதாரத்தோடு, ஏழைகளாக இருப்பவர்கள் குடியிருக்கவேண்டும் என்பதுதான் அதனுடைய நோக்கம். ஆனால் இடையிடையே பல பேர் குடிசை களைத் திரும்பவும் அந்த இடங்களில் அனுமதி இல்லாமல் போட்டுக்கொள்வதால் பலயிடங்களிலே சுத்தப்படுத்திவைக்க முடியாமல் இருக்கிறது. இந்தக் குடிசை மாற்று வாரிய வீடு கள் பகுதிகளிலே சாக்கடை வெட்ட மாட்டேன் என்று சொல்லு கிறார்கள். சாக்கடை வெட்டுகின்ற வேலையை முனிசிபா லிட்டிக்கு hand over செய்யாததால் அவர்கள் எடுக்கமாட்டேன் என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட Unauthorised ஆக இருக்கக் கூடிய, திரும்பவும் முளைக்கிற குடிசைகள் முளைக்கா மல் தடுப்பதற்கும் முளைத்து இருப்பதை அங்கே இருந்து நீக்குவதற்கும் 'அதே மாதிரி' சாக்கடை வசதி இல்லாமல் இருப் பதை போக்க முனிசிபாலிட்டிக்கு hand over செய்வதற்கும் ஒரு திட்டவட்டமான முடிவை குறிப்பிட்ட காலத்திற்குள் நிறை வேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர் வைத் தலைவர் அவர்களே, அரசு இது குறித்து பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக 1970 ஆம் ஆண்டிலிருந்து 1977 ஆம் ஆண்டு வரை வழங்கப் பட்ட வீடுகளில் அவர்கள் குடியிருக்காமல் மற்றவர்களுக்கு வாடகைக்கு விட்டுவிட்டு அல்லது வேறு விதத்தில் பயன் படுத்திக்கொண்டு இருக்கிறார்கள் என்ற தகவல் அரசுக்கு வந் திருக்கிறதா? இது குறித்து விசாரணைக் கமிஷன் ஒன்றை அரசு நியமிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் கேட்டு விட்ட காரணத்தால் பதில் சொல்லுகிறேன். இது குறித்து ஏற்கனவே குடிசை மாற்று வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்கு என்று தனியாக விசாரணை கமிஷன் தேவையில்லை.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்டு இருக்கிற வீடுகளில் 10 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள அத்தனை வீடுகளையும் குடியிருப்பவர்களுக்கே விற்கும் திட்டத்தை அரசு உருவாக்கினால் இந்த நிலையைத் தவிர்க்கலாம் என்பது பற்றி அரசு ஆலோசிக்குமா என அறிய விரும்புகிறேன்?

(பதில் இல்லை.)

திரு. எஸ். வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பா. வளர்மதி அவர்கள் கேட்ட கேள்வியை நான் கேட்கலாம் என்று இருந்தேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி இடிந்து இருக்கிற கட்டிடங்களைப் பழுதுபார்ப்பது குறித்து. தனியாகக் கேள்வி போட்டால் பதில் தரப்படும்.

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு மையங்களின் கண்காணிப்புக் குழுக்கள்.

32—(*வினா எண். 9491) திரு. செ. செம்மலை: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு மையங்களைக் கண்காணிக்க ஏற்படுத்தப்பட்ட கண்காணிப்புக் குழுக்கள் செயல்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், மாற்று ஏற்பாடு ஏதேனும் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.